பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!

# ஏன் இறைவனின் இந்தக் கோப (கோர) பிடி?!

அந்தோ பரிதாம்! சில காலங்களாக உலக அளவில் மக்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். சின்னாபின்னமாக்கப் படுகிறார்கள். பூகம்பங்கள், சுனாமிகள், சூறாவளிகள், தொடர் மழைகள், மற்றும் பெரும் வெள்ளங்கள் இப்படி பல்வேறு கஷ்டங்களை மனிதர்கள் சமீப காலங்களாக அனுபவித்து வருகிறார்கள். இந்த மோசமான சூழ்நிலைகள் வந்ததற்கு என்ன காரணம் என்று யாராவது சிந்தித்தார்களா? விஞ்ஞானத்தின் உச்சத்தில் இருக்கும் நம்மால் ஏன் அதைத் தடுக்க முடியவில்லை? என்று ஒரு நொடிப் பொழுதேனும் சிந்தித்தார்களா?

இது இயற்கைச் சீற்றம் அல்ல படைத்தவனின் ஒரு தண்டனையாக இருக்க முடியாதா? இங்கு வாழும் மக்களை எச்சரிக்கை செய்வதற்காக இந்தப் பேராபத்துகள் ஏற்பட்டிருக்காதா? நம் செயல்பாடுகள் அவ்வாறு அமைந்திருக்கவில்லையா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

ஓரிறைக் கொள்கை மறுப்பு, விபச்சாரம், அளவு மோசடி, துரோகம், ஓரினச் சேர்க்கை, லஞ்சம், நீதியின்மை, தீவிரவாதம், அமானித மோசடி, கொலை-கொள்ளை, வரதட்சணை, பொய்-பித்தலாட்டம், பெண்களுக்கு அநீதி என்று மனித நேயத்திற்கும் மனிதனுக்கும் ஒவ்வாத ஏராளமான செயல்களை இந்தச் சமூகம் செய்து வருகிறது. இத்தனை கொடுமைகளும் நடக்கும் போது இந்தச் சீற்றங்கள் ஏன் இறைவனின் தண்டனையாக அல்லது எச்சரிக்கையாக இருந்திருக்காது?

முந்திய காலங்களில் வாழ்ந்து படைத்தவனை மறந்து மன இச்சையின்படி செயல்பட்டவர்கள் இது போன்ற கோரப்பிடிகளுக்கு ஆளானார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. உலகப் பொதுமறை திருக்குர்ஆன் பல சமூகத்தினர் இவ்வாறு நடந்த காரணத்தால் அந்தச் சமூகம் அழிக்கப்பட்டதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

## ஓரிறைக் கொள்கையை மறுத்தவர்கள்!

திருக்குர்ஆனில் ஒரே இறைவனை ஏற்க மறுத்தவர்களின் நிலைகளை பல இடங்களில் வல்ல அல்லாஹ் எடுத்துரைக்கிறான். 950 ஆண்டுகள் ஏகத்துவ பிரச்சாரத்தை செய்த நபி நூஹ்(அலை) அவர்களின் சமுதாயத்தில் ஏகத்துவத்தை ஏற்க மறுத்தோரின் நிலையை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

**"உங்கள் இறைவனிடமிருந்து வேதனையும் கோபமும் உங்கள் மீது ஏற்பட்டு விட்டது. நீங்களும் உங்கள் முன்னோர்களும் சூட்டிக் கொண்ட வெறும் பெயர்களைப் பற்றி (கற்பனைப் பாத்திரங்களைப்பற்றி) என்னிடம் தர்க்கம் செய்கிறீர்களா? அது பற்றி அல்லாஹ் எந்தச் சான்றையும் அருளவில்லை. எதிர் பாருங்கள்! உங்களுடன் சேர்ந்து நானும் எதிர்பார்க்கிறேன் என்று அவர் கூறினார்.**

**அவரையும் அவருடன் இருந்தவர்களையும் நமது அருளால் காப்பாற்றினோம். நமது வசனங்களைப் பொய்யெனக் கருதியோரை கருவறுத்தோம். அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை" (அல்குர்ஆன் 7:71,72)**

படைத்த ஏக இறைவனை வணங்க மறுத்து வாழ்பவர்களுக்கும், வல்ல இறைவனுக்கு இருக்கக்கூடிய பண்புகளை அவனுடைய படைப்புகளுக்கு வழங்கி அப்படைப்புகளை வணங்குபவர்களுக்கும், இப்பேரழிவுகள் ஏன் ஒரு எச்சரிக்கையாக இருக்கக் கூடாது? சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

## அளவில் மோசடி செய்தவர்கள்!

உலக வாழ்க்கையை மட்டும் கவனத்தில் கொண்டு நீதி, நேர்மையைக் காற்றில் பறக்கவிட்டவர்கள் மனிதர்களில் அதிகம். இவ்வகையைச் சார்ந்தவர்கள் இறைத்தூதர் நபி ஷுஐப்(அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்தார்கள். இவர்கள் எடைகளில் மோசடி செய்தனர். மக்களிடம் கொடுக்கும் போது அளவைக் குறைத்தும், வாங்கும் போது நிறைவாகவும் வாங்கினர். இதன் மூலம் செல்வத்தைப் பெருக்கினர். இந்த மோசடி வாழ்க்கையை நபி ஷுஐப்(அலை) அவர்கள் கண்டித் தார்கள். இவ்வாறு செய்வது இறைக் கோபத்தை ஏற்படுத்தும் என்றார்கள். ஆனால் அம்மக்கள் இப்போதனையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் மீது இறைவனின் கோபப்பார்வை ஏற்பட்டது. இதைத் திருக்குர்ஆன் பின்வருமாறு விவரிக்கிறது.

**"என் சமுதாயமே! அளவையும் நிறுவையையும் நேர்மையாக நிறைவாக்குங்கள்! மக்களுக்கு அவர்களின் பொருட்களைக் குறைத்து விடாதீர்கள்! இப்பூமியில் குழப்பம் விளைவித்துத் திரியாதீர்கள்!" (அல்குர்ஆன் 11:85)**

**"மத்யன் நகருக்கு அவர்களின் சகோதரர் ஷுஐபை அனுப்பினோம். "என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள்! உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை உங்கள் இறைனிடமிருந்து உங்களிடம் சான்று வந்துள்ளது. எனவே அளவையும் நிறுவையையும் நிறைவாக்குங்கள்! மக்களுக்கு அவர்களின் பொருட்களைக் குறைத்து விடாதீர்கள்! பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்ட பின் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள்! நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் இதுவே உங்களுக்குச் சிறந்தது" என்று அவர் கூறினார். (அல்குர்ஆன் 7:85)**

**"உடனே அவர்களைப் பூகம்பம் தாக்கியது. காலையில் தமது வீடுகளில் வீழ்ந்து கிடந்தனர். ஷுஐபைப் பொய்யரெனக் கருதியோர் (அதற்குமுன்) அங்கே வசிக்காதோரைப் போலானார்கள். ஷுஐபைப் பொய்யரெனக் கருதியோரே நஷ்டமடைந்தோரானார்கள்" (அல்குர்ஆன் 7:91,92)**

**"நமது கட்டளை வந்த போது ஷுஐபையும் அவருடன் உள்ள நம்பிக்கை கொண்டோரையும் நமது அருளால் காப்பாற்றினோம். அநீதி இழைத்தவர்களைப் பெரும் சப்தம் தாக்கியது. காலையில் தமது வீடுகளில் வீழ்ந்து கிடந்தனர். அங்கே வசிக்காதவர்களைப் போல் (ஆனார்கள்). கவனத்தில் கொள்க! ஸமூது சமுதாயத் தினர் (இறையருளை விட்டு) தூரமானது போல் மத்யன் வாசிகளும் தூரமானார்கள்" (அல்குர்ஆன் 11:94,95)**

படைத்த ஒரு இறைவனை மறந்து, மறுத்து அளவில் மோசடி செய்து கொண்டிருக்கும் இம்மக்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் நிகழ்வுகள் ஏன் ஒரு எச்சரிக்கையாக இருக்காது? சிந்தித்துப்பாருங்கள்!

## ஒழுக்கக் கேடுகள்!

மனிதனுக்கும். மிருகங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் வாழ்க்கை முறையில் உள்ளது. அதில் குறிப்பாக மிருகங் களைப்போல் உறவுகொள்ளலாமல் ஒரு வரையறை நியமித்து நடக்கவேண்டும் என்று இறைவன் நமக்கு வழிகாட்டுகிறான்.

**"அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு கடவுள்களைப் பிரார்த்திக்க மாட்டார்கள். அல்லாஹ் தடை செய்துள்ள எந்த உயிரையும் தக்க காரணமின்றி கொல்ல மாட்டார்கள். விபச்சாரம் செய்யமாட்டார்கள். இதைச் செய்பவன் வேதனையைச் சந்திப்பான்"(அல்குர்ஆன் 25:68)**

**"தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக! அவர்கள் தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும்" (அல்குர்ஆன் 24:31)**

இவ்வாறு பல அறிவுரைகளை இஸ்லாம் கூறுகிறது. ஆனால் மனிதன் இவைகளுக்கு மாற்றமாக ஆடல், பாடல், இசை, டிவி, சினிமா ஆகியவற்றில் மதிமயங்கி ஒழுக்கம்-மானம் கெட்டு கூச்ச உணர்வுகள் அற்று ஆடையை அணிந்தும் நிர்வாணிகளாக தோற்றமளிப்பதைக் காண்கிறோம்.

விபச்சாரம் இன்று சர்வசாதரணமாக நடைபெறுகிறது. இவ்வாறு நாகரீக உலகில் ஒழுக்கம் எவ்வளவு விலை என்று கேட்கும் வண்ணம் மாறிவிட்டது. இவர்களின் செயல்களால் ஏன் முந்திய சமூகங்களுக்கு வந்தது போல் தண்டனை வராது? சிந்தித்துப் பாருங்கள்!

ஒழுக்கக் கேட்டின் உச்சமான ஓரினச்சேர்க்கை இன்று தலைதூக்கியுள்ளது. இந்த ஈன செயலிற்காக ஒரு சமுதாயமே அழிக்கப்பட்ட வரலாற்றை வல்ல இறைவன் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்...

**"லூத்தையும் (தூதராக அனுப்பினோம்). "உலகில் உங்களுக்கு முன் யாரும் செய்திராத வெட்கக்கேடான காரியத்தையா செய்கிறீர்கள்?" என்று தமது சமுதாயத்திடம் கேட்டார்.**

**"நீங்கள் பெண்களை விட்டு இச்சைக்காக ஆண்களிடம் செல்கிறீர்கள்!" நீங்கள் வரம்பு மீறிய கூட்டமாகவே இருக்கிறீர்கள்" (என்றும் கூறினார்)**

**"இவர்களை உங்கள் ஊரை விட்டு வெளியேற்றுங்கள்! இவர்கள் சுத்தமான மனிதர்களாக உள்ளனர்" என்பதே அவரது சமுதாயத்தின் பதிலாக இருந்தது.**

**எனவே அவரது மனைவியைத் தவிர அவரது குடும்பத்தாரையும் அவரையும் காப்பாற்றினோம். அவள் அழிந்து போவோரில் ஒருத்தியாக இருந்தாள்.**

**அவர்களுக்கு பெருமழையைப் பொழிவித்தோம். குற்றவாளிகளின் முடிவு எவ்வாறு இருந்தது? என்பதைக் கவனிப்பீராக!" (அல்குர்ஆன் 7:80-84)**

**"நமது கட்டளை வந்த போது அவ்வூரின் மீது சுடப்பட்ட கற்களால் கல் மழை பொழிந்து அதன் மேற்பகுதியைக் கீழ்ப்பகுதியாக்கினோம். (அவை) உமது இறைவனிடம் அடையாளமிடப்பட்டது. அவ்வூர்(இந்த) அநீதி இழைத் தோருக்குத் தொலைவில் இல்லை" (அல்குர்ஆன் 11:82-83)**

**"அவர்கள் வெளிச்சத்தை அடைந்த போது பெரும் சப்தம் அவர்களைத் தாக்கியது. அவர்கள் மீது சூடேற்றப்பட்ட கல் மழை பொழிந்து அவ்வூரின் மேற் பகுதியைக் கீழ்ப்பகுதியாக்கினோம். சிந்திப்போருக்கு இதில் பல சான்றுகள் உள்ளன. அவ்வூர் (நீங்கள் சென்று வரும்) நிலையான சாலையில்தான் உள்ளது. நம்பிக்கை கொண்டோருக்கு இதில் சான்று இருக்கிறது" (அல்குர்ஆன் 15:73-77)**

இவ்வளவு மோசமான காரியத்திற்காக இறைவன் அனுப்பிய எச்சரிக்கையாக இந்தப் பேரழிகள் இருந்திருக்காதா? சிந்தித்துப் பாருங்கள்!

## செத்துப் போன மனிதாபிமானம்!

மனிதன் என்றால் பகுத்தறிவு படைத்தவன். மற்ற மிருகங்களைப் போன்று உள்ளவன் அல்ல. அவனிடம் இரக்க குணம் இருக்க வேண்டும்! நலிந்தவர்களுக்கு உதவ வேண்டும்! இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும்!

நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**"மனிதனுக்கு இரக்கம் காட்டாவதனுக்கு இறைவன் இரக்கம் காட்ட மாட்டான்" (ஆதார நூல்: புஹாரி 7376)**

**"தன் பக்கத்திலிருக்கும் அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவர் இறை நம்பிக்கையாளராய் இருப்பதில்லை" (ஆதார நூல்: ஷுஅபுல் ஈமான் - பைஹகீ)**

**"தனக்கு விரும்பியதை தன் சகோதரனுக்கு விரும்பாத வரை உங்களில் ஒருவர் நம்பிக்கை கொண்டவராக ஆக முடியாது" (ஆதார நூல்: புஹாரி13)**

**"நீ குழம்பு வைத்தால் அதில் தண்ணீரை அதிகப்படுத்து! பின்னர் உன் பக்கத்து வீட்டாரைக் கவனித்து அவர்களுக்கு இதில் நல்லமுறையில் கிடைக்கச் செய்!" என்று முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஆதார நூல்: முஸ்லிம் 4759)**

இவ்வாறு மனிதாபிமானத்தைப் போதிக்கும் அறிவுரைகள் ஏராளம் இஸ்லாத்தில் உள்ளது. ஆனால் மனிதர்கள் இவ்வாறு நடந்து கொள்வதில்லை. அடுத்தவர்கள் எவ்வளவு கஷ்டபட்டாலும் தான் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நடந்து கொள்கிறார்கள். கஷ்டமான நேரத்தில் கடன் கேட்டால் கடன் கொடுத்து உதவாமல் அதற்கு வட்டி கணக்கு போட்டு ஏழைகளின் இரத்ததை உறிஞ்சி எடுகிறார்கள். இதைப் போன்று ஏராளமான காரியங்களை நாம் உதாரணமாக கூறலாம்.

இவ்வாறு நடப்பவர்களுக்கு இறைவன் தந்த எச்சரிக்கையே இந்தப் பேரழிவுகள் என்று ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? சிந்தித்துப் பாருங்கள்!

இறுதியாக இந்தப் பேரழிவுகள் எல்லாம் இயற்கையின் சீற்றம் என்று சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. விஞ்ஞானத்தின் உச்சியில் இருக்கும் நாம் ஏன் இந்தச் சீற்றங்களை தடுக்க முடியவில்லை. ஏராளமான நவீன கருவிகளை வைத்திருக்கும் அமெரிக்காவால் காத்ரீனா, ரீட்டா போன்ற சூறாவளிகளை ஏன் தடுத்து நிறுத்த முடியவில்லை?

பெரிய பெரிய வல்லரசுகளால்கூட இதைத் தடுக்க முடியவில்லையானால் நம்மை விட பெரிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதை நமக்குக் காட்டவில்லையா? அவனை ஏன் நாம் சிந்திப்பதில்லை? அவன் கொடுத்த வேதத்தை ஏன் படிப்பதில்லை?

எனவே நாம் இயற்கை பேரழிவுகளிலிருந்து பாடம் பெற்று, நம்முடைய வாழ்வை திருக்குர்ஆனும், நபிமொழி களும் சொன்ன முறைப்படி அமைத்துக்கொண்டு ஈருலக ஈடேற்றம் அடைய வல்ல ரஹ்மான் துணை புரிவானாக!


# கல்வி விழிப்புணர்வு முகாம்!

## மதுரை மண்டலம்

**இன்ஷா அல்லாஹ் T.N.T.J. மாணவரணி நடத்தும் இந்த முகாமில் மாணவ, மாணவியர்களின் எதிர்கால கல்வி குறித்த ஆலோசனைகளை சிறந்த கல்வி வல்லுணர்கள் வழங்க இருக்கின்றார்கள்.**

## இராமநாதபுரம்

**நாள்: 28-06-2008 சனி காலை 10 மணி**

**இடம்: வலம்புரி மஹால்** (பனிமனை எதிரில்)

**தொடர்புக்கு: மதுரை** - இல்யாஸ் 9842020051
கலீல் 9994898598 அப்துல் ஹலீம் 9443571267
**இராமநாதபுரம்** - அப்துல் ஹமீது 9443368527
**திண்டுக்கல்** - இஸ்மாயீல் சேட் 9345008828
**தேனி** - ஜமால் மைதீன் 9994747150
**விருதுநகர்** - ரியாஸ் 9787550920 அக்பர்அலி 9443544103
**சிவகங்கை** - ரபீக் முஹம்மது 9865966670, 9965948984



வெளியீடு: 123 அன்புடன் வெளியிடுவோர்... நாள்: 27-06-2008

**ஜமாஅத்துத் தவ்ஹீத் (TNTJ) – துபை**

**தொலைபேசி : 04-2715830**